# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● நவம்பர் 09, 2024

Weekly E-paper ● November 09, 2024






## திராவிடத்தை எதிர்ப்பது ஆரியத்திற்குத் துணைபோவதே..!

நடிகர் சத்யராஜ்

## "எல்லோரும் சமம்" என்று சொல்வது ஒடுக்குமுறையா?

இராம.வைரமுத்து

## காஷ்மீரும், 370-வது பிரிவும்...!

தலையங்கம்

## நவம்பர் புரட்சி..!

நிகில் தேவ்

# கருஞ்சட்டைத் தமிழர்


ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2055 ● நவம்பர் 09, 2024 Weekly E-paper ● November 09, 2024


# திராவிடத்தை எதிர்ப்பது ஆரியத்திற்குத் துணைபோவதே..!

## நடிகர் சத்யராஜ்

**கடந்த 08.11.2024 அன்று அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் நடைபெற்ற "திராவிடமே தமிழுக்கு அரண்" என்ற நிகழ்வில் இனமுரசு நடிகர் சத்யராஜ் ஆற்றிய தலைமையுரையில் இருந்து சில பகுதிகள்:**



இது ஒரு முக்கியமான நிகழ்வு என்பதால், வரும்போதே மனதில் ஒரு முடிவுடன்தான் வந்தேன். இதில் சரியான கருத்துகளைப் பேச வேண்டும் என்பதால் எனது கருத்துகளை எழுதியே எடுத்து வந்து விட்டேன். ஏனென்றால் இதை முக்கியமான மேடையாக, மிக முக்கியமான மேடையாக நினைக்கிறேன். எனது அனுபவத்தை வைத்துத்தான் இதில் பேசப் போகிறேன்.

எங்களது ஊரில் பெரியார் நூலகம் அமைக்கப்படும் என்று அறிவித்துள்ள மானமிகு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனக்கு 11 வயது இருக்கும்போது, அதாவது 1965ஆம் ஆண்டில்தான் இந்தி எதிர்ப்புப் போராட்டம் உச்சகட்டத்தில் இருந்தது. அப்போது நான் ஏழாம் வகுப்பு மாணவன். எங்களுடையது வசதியான, மிட்டா மிராசு போன்றதொரு குடும்பம். எங்களைக் கான்வெண்டில்தான் சேர்த்துப் படிக்க வைப்பார்கள். இந்தி எதிர்ப்புப் போராட்டம் வரும் வரையில் எனக்குத் தமிழ் ஆர்வம், தமிழ் உணர்வு என்பதெல்லாம் இல்லை. இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதுதான் தமிழ் வாழ்க..! இந்தி ஒழிக! என்பன போன்ற முழக்கங்கள் எல்லாம் பெரிய அளவில் வருகிறது. அதைப் பெரிய அளவில் முன்னெடுத்து வந்தது திராவிட முன்னேற்றக் கழகம்தான். அப்போதுதான்



திமுகவின் மூலமாக இளைஞர்களின் பார்வை தமிழின் பக்கம், தமிழின் பெருமையின் பக்கம் திரும்புகிறது.

நான் தீவிரமான புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ரசிகன். அவரது 'பணம் படைத்தவன்' திரைப்படத்தில் "உயிரைத் தமிழுக்கும் உடலை மண்ணுக்கும் உதவும் நாள் கண்டு துடிப்பார்" என்ற பாடல் வரிகள் வரும். எங்கே போனாலும் திராவிட இயக்க சினிமாதான் தமிழ் ஆர்வத்தை ஊட்டி வளர்த்தது. பராசக்தி மறுவெளியீடாக வந்தபோது அத்திரைப்படத்தை பார்த்தேன். அப்போது தமிழின் மீது மரியாதை வந்தது; கலைஞருடைய தமிழின் மீது காதல் வந்தது. பராசக்தி வசனங்களைக் கேட்டுக் கேட்டு மனப்பாடமே ஆகிவிட்டது. அந்த வசனங்களைப் பேசிக் காட்டுவதே அப்போது ஒரு பெருமை.

மலைக்கள்ளனில் "தமிழர் என்றோர் இனமுண்டு, தனியே அவர்க்கோர் குணமுண்டு", நாடோடி மன்னனில் "செந்தமிழே வணக்கம்" என்று திராவிட இயக்கமும் திராவிட இயக்கக் கலைஞர்களும் சேர்ந்து தமிழை நேசிக்க வேண்டிய மனநிலையை உருவாக்கினர்.

பிறகு திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்ததும், தமிழ்நாடு என்று பெயர் சூட்டப்பெற்றது. இதைவிட என்ன சான்று வேண்டும்?

1985 காலகட்டத்தில், தமிழீழ விடுதலைப் போர் மிகப்பெரிய உச்சத்தை அடைகிறது. அப்போது திராவிட இயக்கத் தலைவர்கள் சுபவீ, வைகோ, கொளத்தூர் மணி, கோவை இராமகிருஷ்ணன் போன்ற ஏராளமான பெரியார் இயக்கத் தொண்டர்களும், திமுக

தொடர்ச்சி அடுத்த பக்கம்...

# "எல்லோரும் சமம்" என்று சொல்வது ஒடுக்குமுறையா?

வழக்கறிஞர் இராம.வைரமுத்து


சமீபத்தில் தமிழ்நாட்டில் தாங்கள் ஒடுக்கப்படுவதாக கூறி பார்ப்பனர்கள் பேரணி நடத்தப் போவதாக அறிவித்தனர். பிறகு அம்முடிவை மாற்றிக் கொண்டு அர்ஜுன் சம்பத் தலைமையிலான இந்து மக்கள் கட்சி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர். அதற்கான எதிர்வினையாக அன்று மாலையே திராவிடர் கழகத்தின் சார்பில் அதன் துணைத் தலைவர் கவிஞர் கலி. பூங்குன்றன் தலைமையில் வர்ணாசிரம எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

பார்ப்பனர்களின் ஆர்ப்பாட்டத்தில் பேசப்பட்ட கருத்துக்களுக்கு அவர்கள் தரப்பிலேயே எதிர்ப்பு கிளம்பியது. நடிகர் எஸ்.வி.சேகர், ஊடகவியலாளர் ரங்கராஜ் பாண்டே போன்றவர்கள் பார்ப்பனர்களின் ஆர்ப்பாட்ட பேச்சுக்களை கண்டித்துள்ளனர்.

கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் பார்ப்பனர்களுக்கு வாய்ப்பு மறுக்கப்படுவதாக ஒரு பொய்யை அவர்கள் கட்டமைக்கிறார்கள். ஆனால் உண்மை நிலையோ வேறு.

1890 ஆம் ஆண்டு சென்னை மாகாணத்தின் மொத்த மக்கள் தொகை நான்கரை கோடி. அவற்றில் ஏறக்குறைய நான்கு கோடி பேர் பார்ப்பனர் அல்லாதவர்கள். அரை கோடிக்கும் குறைவான எண்ணிக்கையில் இருந்தவர்கள் பார்ப்பனர்கள். ஆனால் 1892 முதல் 1904 வரை நடந்த இந்திய சிவில் சர்வீஸ் தேர்வில் வெற்றி பெற்ற 16 பேரில் 15 பேர் பார்ப்பனர்கள். கடந்த இருபது ஆண்டுகளில் உதவிப் பொறியாளர் பணிக்கு நியமிக்கப்பட்ட 21 பேரில் 17 பேர் பார்ப்பனர்கள். நான்கு பேர் மட்டுமே பார்ப்பனர் அல்லாதவர்கள். உதவி கலெக்டர் பதவிக்கு நியமிக்கப்பட்ட 140 பேரில் 77 பேர் பார்ப்பனர்கள்.

நீதிக்கட்சி ஆட்சியில் வகுப்பு வாரி இட ஒதுக்கீடு அமல்படுத்தப்பட்ட பிறகு தான் இந்த நிலை மாறி பார்ப்பனர் அல்லாதவர்கள் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் கணிசமான பிரதிநிதித்துவம் பெற்றனர். இருப்பினும் பார்ப்பனர்கள் தங்கள் மக்கள் தொகைக்கும் அதிகமான பிரதிநிதித்துவத்தையே இப்போதும் பெறுகின்றனர்.



ஐ.ஐ.டி, ஐ.ஐ.எம் போன்ற உயர்கல்வி நிறுவனங்களில் இன்றவும் பார்ப்பனர்களின் ஆதிக்கமே நிலவுகிறது. அதையும் தாண்டி அங்கே நுழையும் பார்ப்பனர் அல்லாதவர்களால் அங்கே படிக்கவோ / பணி செய்யவோ இயலாத நிலை ஏற்பட்டுள்ளது.

2023 டிசம்பரில் ஒன்றிய சட்ட அமைச்சர் அர்ஜூன் மேக்வால் நாடாளுமன்றத்தில் அளித்த புள்ளிவிவரத்தின்படி 2018 முதல் 2023 வரை நியமிக்கப்பட்ட 650 உயர்நீதிமன்ற நீதிபதிகளில் 492 பேர் உயர் வகுப்பினர், 23 பேர் தாழ்த்தப்பட்டோர், 10 பேர் பழங்குடியினர், 76 பேர் இதர பிற்படுத்தப்பட்டோர் ஆவர். இதன் மூலம் இட ஒதுக்கீடு பின்பற்றப்படாத பணியிடங்களில் 90% பார்ப்பனர்களே தற்போதும் உள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்.

இவற்றையெல்லாம் மறைத்து விட்டு தாங்கள் ஒடுக்கப்படுவதாக ஒரு நாடகத்தை பார்ப்பனர்கள் நடத்தி உள்ளனர். அதற்கு ஆண்ட ஜாதி பெருமை பேசும் பார்ப்பனர் அல்லாதவர்களும் பலியாகி உள்ளனர். அவர்கள் ஆரிய சூழ்ச்சியிலிருந்து விடுபட்டு "பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்" என்ற தமிழ்நாட்டின் தத்துவத்தை ஏற்று ஆரியர்களின் கொட்டத்தை அடக்கும் போராட்டத்தில் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதுடன் "எல்லோரும் சமம். எல்லோருக்கும் எல்லாம்" என்ற நோக்கோடு செயல்பட்டு வரும் திராவிட மாடல் அரசுக்கு வலுச் சேர்க்க வேண்டும். ●

---

முன்பக்கத் தொடர்ச்சி...

தொண்டர்களும்தான் சிறைக்குப் போனதும் தூக்குக் கயிறு வரைக்கும் போனதும். ஈழ விடுதலைக்கு ஆதரவு கொடுத்து உத்வேகமாக இருந்தது திராவிட இயக்கங்கள்தான். தமிழீழ தேசியத் தலைவர் மேதகு பிரபாகரன் உண்ணாவிரதம் இருந்தபோது, பழச்சாறு கொடுத்து உண்ணாவிரதத்தை முடித்து வைத்தது ஆசிரியர் அவர்கள்தான். நான் பேரறிவாளனைச் சந்திக்க அவருடைய வீட்டிற்குச் சென்றபோது, அவருடைய வீட்டில் இருந்தது பெரியார் படமும், பிரபாகரன் படமும்தான்.

தமிழ்த்தேசியம் என்ற பெயரில் திராவிடத்தை எதிர்ப்பது அறிந்தும் அறியாமலும், தெரிந்தும் தெரியாமலும் ஆரியத்திற்குத் துணைபோவதுதான் என்பது என்னுடைய உடன்பாடு. அப்படிப் போகும்போது சாஸ்திரம், சடங்கு, சம்பிரதாயம் என்கிற போர்வையில் சகல விதமான மூடநம்பிக்கைகளும் மறுபடியும் வளரும்; சாதிய ஒடுக்குமுறை, பெண்ணடிமைத்தனம், மதச் சிறுபான்மையினருக்கு அச்சுறுத்தல், அடக்குமுறை எல்லாம் தலைதூக்கும். திராவிடம்தான் தமிழ்நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் பாதுகாப்பானது. திராவிடமே தமிழுக்கு அரண்...! ●

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## காஷ்மீரும், 370-வது பிரிவும்...!

அண்மையில் ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு அரசியலமைப்புச் சட்டத்தின் 370-வது பிரிவின்கீழ் மீண்டும் சிறப்பு அந்தஸ்து வழங்கக் கோரி அம்மாநிலத்தின் சட்டப்பேரவையில் தீர்மானம் கொண்டு வரப்பட்டுள்ளது. இத்தீர்மானத்தை அவையில் இருந்த காங்கிரஸ் தவிர மற்ற அரசியல் கட்சிகள் ஆதரித்துள்ளன. 2019ஆம் ஆண்டு காஷ்மீருக்கு வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தை பாஜக தலைமையிலான ஒன்றிய அரசு நீக்கியது.

இது குறித்துத் தந்தை பெரியார் கூறியதை நினைவுகூர்வது இங்குப் பொருத்தமாக இருக்கும். “காஷ்மீரைப் பற்றி முடிவுசெய்யும் விஷயத்தை காஷ்மீர் மக்களுக்கே விட்டுவிட வேண்டும். காஷ்மீரத்திலே புகுந்திருக்கும் இந்தியாவும் வெளியேற வேண்டும். பாகிஸ்தானும் வெளியேற வேண்டும். இதுதான் காஷ்மீர் மக்களுக்கு நீதி செய்வதாகும்”.

தந்தை பெரியாரின் கருத்தை மேற்கோள் காட்டியே நாடாளுமனறத்தில் திமுக மாநிலங்களவை உறுப்பினர் எம். எம். அப்துல்லா உரையாற்றினார். ஆனால் தந்தை பெரியாரின் மேற்கோளை அவைக்குறிப்பிலிருந்து நீக்கினார் அவைத்தலைவர். பின்னர் பேசிய மாநிலங்களவை உறுப்பினர் திருச்சி சிவா, தந்தை பெரியார் பேசியது இந்தியாவின் தேசிய இனங்களுக்கான சுயநிர்ணய உரிமையே என்று குறிப்பிட்டுப் பேசினார். காங்கிரசைச் சேர்ந்த கே.சி. வேணுகோபாலும் பெரியாரின் கருத்தை மேற்கோள் காட்டியதில் தவறு இல்லை என்று பேசினார்.

பாஜக ஒன்றிய அரசில் பொறுப்பேற்றதில் இருந்தே கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிராகவும், மாநிலங்களின் உரிமைகளுக்கு எதிராகவும் செயல்பட்டு வருகிறது. ஒரே நாடு, ஒரே மதம், ஒரே மொழி, ஒரே தேர்தல் என்று இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு விரோதமாகச் செயல்பட்டு வருகிறது.

இந்தியாவின் பன்முகத் தன்மைக்கு ஏற்ற வகையில் அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டும். இந்தி மட்டுமே அலுவல் மொழி, ஆளுநர்களுக்கான அதிகாரம், பொதுப் பட்டியல் என இந்தியாவில் தேசிய இனங்களின் உரிமைக்கு எதிரான அரசியலமைப்பின் அத்தனை பிரிவுகளும் நீக்கப்பட வேண்டும். அப்போதுதான் இந்தியா இந்தியாவாக இருக்கும். இதனைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்து வலியுறுத்துவதே நமது கோரிக்கைக்கு வலுச்சேர்ப்பதாக இருக்கும்.

ஆசிரியர்:
சுப.வீரபாண்டியன்
பொறுப்பாசிரியர்
எழில்.இளங்கோவன்
உதவி ஆசிரியர்கள்:
வெற்றிச்செல்வன்
சாரதா தேவி
வெளியீடு:
திராவிட இயக்கத் தமிழர் பேரவை

இணையதளம்:
www.keetru.com,
www.karunchattaibooks.com
மின் அஞ்சல்:
karunchattai@gmail.com
டுவிட்டர்: suba_vee
தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு,
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை– 600 024,
தொலைபேசி: 044-2472 6408

## ‘திராவிடமே தமிழுக்கு அரண்’ கருத்தரங்கம்




சென்னை அடையாறு முத்தமிழ்ப் பேரவையில் திராவிடமே தமிழுக்கு அரண் என்ற தலைப்பில் 08.11.2024 அன்று கருத்தரங்கம் நடைபெற்றது. நடிகர் சத்யராஜ் தலைமை தாங்கிய இந்நிகழ்வில் பேரவைத் தலைவர் பேராசிரியர் சுபவீ அவர்கள் சிறப்புரையாற்றினார். பொதுச்செயலாளர் சிற்பி வரவேற்புரை ஆற்றினார். மாண்புமிகு அமைச்சர் மா. சுப்பிரமணியன், சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை வேலு, பிரபாகர் ராஜா, திராவிட நட்புக் கழகத் தலைவர் சிங்கராயர், பேரவைத் துணைப் பொதுச் செயலாளர்கள் காசு. நாகராசன், வழக்கறிஞர் இராம. வைரமுத்து, கொள்கைப் பரப்புச் செயலாளர் உமா, தலைமை நிலையச் செயலாளர் எட்வின் உள்ளிட்ட பேரவைத் தோழர்கள், திமுகவினர், பொதுமக்கள் ஆகியோர் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.

# நவம்பர் புரட்சி..!

## நிகில் தேவ்



ஆச்சரியங்கள் மட்டுமே நிறைந்த புரட்சிகர நாள் நவம்பர் 7. உலக அளவில் ஆட்சி மாற்றங்களும், ராணுவ ஆட்சிகளும் புதிதல்ல ஆனால் ரஷ்யாவில் நடந்த இந்தப் புரட்சி ஏன் உலகமெங்கும் பேசப்பட்டது? இன்றும் மாமேதை லெனினும் சோவியத் யூனியனும் உலகில் பல்வேறு புரட்சிகர இயக்கங்களின் முன்னோடியாகத் திகழ்வது ஏன்?

இன்றைய காலகட்டத்தில் கம்யூனிஸ்ட் கட்சிகளைப் பல்வேறு தரப்பினரும் விமர்சனம் செய்கின்றனர். அதில் குறிப்பாக எண்ணிக்கையில் குறைவான கட்சி என்ற விமர்சனம் தொடர்ச்சியாக வரும். எண்ணிக்கையில் ஏன் குறைவு எதனால் குறைவு என்பது எல்லாம் விவாதிக்க தேவையில்லை, விவாதித்து புரிய வைத்தாலும் இவர்கள் புரிந்து கொள்ளப் போவதும் இல்லை. ஆனால் எண்ணிக்கையில் குறைவாக இருந்தால் மாற்றத்தை எப்படி நிகழ்த்த முடியும் என்ற கேள்விக்கு பதில் ரஷ்யாவில் லெனின் நடத்திய புரட்சி. சுமார் 80% விவசாயிகளும் 20% தொழிலாளர்களும் கொண்டதுதான் அன்றைய ரஷ்யா. வெறும் 20% தொழிலாளிகளை வைத்து புரட்சி பாதையில் தைரியமாக நடக்க முடியாது என்று உணர்ந்த லெனின் வகுத்த யுக்தி மிக முக்கியமானது.

80%விவசாயிகளின் பிள்ளைகள்தான் ஜார் மன்னனின் ராணுவப்படையில் பணியாற்றி வந்தனர், இதைத் தெளிவாகப் புரிந்து கொண்டு விவசாயிகளையும் தொழிலாளிகளையும், விவசாயிகளின் பிள்ளைகளையும் ஒன்றிணைத்து அந்த புரட்சிப் பாதையை வழி வகுத்தார். அதுதான் உண்மையான கம்யூனிஸ்டுகளின் வேலை. உலக மக்களில் கம்யூனிஸ்ட்களின் எண்ணிக்கை என்றுமே சிறுபான்மைதான். ஆனால் புரட்சியை வழிநடத்துவதும் அதைத் தலைமை தாங்குவதும் அதற்கான பலத்தை அனைத்துத் தரப்பிலிருந்து ஒன்றிணைத்து ஒன்றாக செயல்பட்டு வெற்றி பெறுவதும் அவசியம்.

முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் உலகின் வளர்ச்சிக்கு இரண்டு கண்கள் என்று நம்புபவர்களுக்கு இந்த ரஷ்யப் புரட்சி ஒரு சான்றுதான். அன்றைய காலகட்டத்தில் பொருளாதாரத்திலும், வளர்ச்சியிலும் பின் தங்கியிருந்த ரஷ்யா, லெனின் தலைமை தாங்கிய புரட்சியில் பங்கேற்று அங்கு நிலவி வந்த மக்களுக்கு எதிரான ஆட்சியை வேரோடு பிடுங்கி எறிந்து தனக்கான பாட்டாளி மக்களின் ஆட்சியை நிறுவியது. அந்தப் புரட்சியின் வெற்றி அடுத்த அரை நூற்றாண்டுகளில் பல்வேறு நாடுகளில் புரட்சியை நடத்தவும் அதில் பெரும்பான்மையான நாடுகள் வெல்லவும் ஊக்குவித்தது.

இங்கு பலரும் கேட்கும் கேள்வி, எதற்காக வேறு நாட்டின் அரசியல் சிந்தனைகளை நம் நாட்டில் கொண்டாடுகிறோம் என்பது. அதற்கான பதிலும் சோவியத் யூனியன் நமக்குத் தந்துள்ளது. ஜெர்மனியில் வடிவமைக்கப்பட்ட சிந்தனை உலகளாவிய தொழிலாளிகளுக்கானது. அதை தனது நாட்டுக்கு ஏற்றவாறு வடிவமைத்து அங்கு மாபெரும் புரட்சியை நடத்தி தன் நாட்டு மக்களுக்காக அவர்களுக்கு ஏற்றவாறு ஆட்சியை நிறுவியது மட்டும் அல்லாமல் அதை தக்க வைக்கவும் செய்தவர் மாமேதை லெனின். பின் நாட்களில் உலகத்தின் அனைத்து முதலாளித்துவத்தின் ஏவல்கள் இந்த வெற்றிகர ஆட்சியை வீழ்த்த சதி செய்தது, சோவியத் யூனியனும் வீழ்ச்சியை சந்தித்தது. அதன் தொடர்ச்சியாக முதலாளித்துவம் உலகமெங்கும் தன் பலத்தை நிறுவி தொழிலாளிகள் மீது பல்வேறு தடுப்புகளைச் சுமத்தி தன் கைப்பாவையாக வைத்திருக்கிறது.

என்னதான் முதலாளித்துவமும், ஏகாதிபத்தியமும் உலகமெங்கும்பரவிதொழிலாளிகளைச்சுரண்டினாலும் தொழிலாளிகள் ஒன்று திரண்டால் முதலாளித்துவம் தகர்த்தெறியப்படும் என்பது உறுதி. இன்று கொடூர பலத்தில் உலகமெங்கும் தன் ஆதிக்கத்தைச் செலுத்தும் முதலாளித்துவம் சோசியலிசத்தையும், கம்யூனிசத்தையும், கண்டு பயப்படுகிறது என்றால் அது இந்த சோவியத் யூனியன் புரட்சியின் தாக்கம் தான்.

காரல் மார்க்ஸ் வடிவமைத்த சிந்தனை வெற்றி பெறும் என்பதை உறுதி செய்தது சோவியத் யூனியன். உலகமெங்கும் உள்ள தொழிலாளிகளும் ஒடுக்கப்பட்ட சுரண்டப்பட்ட மக்களின் விடுதலையைக் கருத்தில் கொண்ட அனைத்து மக்களும் இந்த நாளை எந்தப் பண்டிகையையும் விட பெரிய அளவு கொண்டாட வேண்டும். மார்க்சிய லெனினியக் கோட்பாடுகள் இந்த மானுடத்தின் விடுதலைக்கான கோட்பாடுகள். ●

### பேரவைத் தலைவரின் நிகழ்ச்சிகள்

**13.11.24** – காலை 11 மணி – சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி – கலைஞர் நூற்றாண்டு விழா

**14.11.24** – மாலை 6.30 மணி – சென்னை, பெரியார் திடல் – நேருவின் உலக சரித்திரம் – தொடர் சொற்பொழிவு

Published By Dravida Iyyakka Tamilar Peravai. Editor Suba. Veerapandian